# சுற்றுமடல்

கடித எண்: GR/6/2013

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

அருளாளர் மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடமான நட்டாலத்தில் வைத்து 2013 ஜனவரி 13 ஞாயிறு அன்று நமது மேன்மைமிகு கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் தலைமையில் நடைபெற்ற வரலாற்று சிறப்பு மிக்க நன்றித்திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் இச்சுற்றுமடல் வழியாக நன்றி கூற விரும்புகிறேன். கர்தினால் அவர்களின் விருப்பத்திற்கேற்ப நாம் கோட்டாறு மறைமாவட்டத்தை அணுகி அதற்கான ஏற்பாடுகள் செய்திருந்தாலும் அங்கு கூடியிருந்த மக்கள் திரளானது அந்நிகழ்வுக்கு அதிக வண்ணம் சேர்ப்பதாக அமைந்தது. உங்கள் அனைவரையும் மனதார நான் பாராட்டுகிறேன், நன்றி கூறுகிறேன். திரளான மக்களை அழைத்து வர ஏற்பாடுகள் செய்த அனைத்து அருள்தந்தையருக்கும் அருள்கன்னியருக்கும் குறிப்பாக அன்றைய நாளில் வழங்கப்பட்ட நேர்ச்சை அப்பத்திற்கு மனமுவந்து நன்கொடையளித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக அமைந்தது. கர்தினால் அவர்களும் தனது மகிழ்ச்சியை தெரிவித்தார்கள்.

மேலும் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட ஆனால் உடனடியாக செய்ய வேண்டிய ஒரு செயலை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இன்றைய நவீன சமுதாயத்திலே சமூகத்தின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் ஊடகம் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். நவீன ஊடகத்தின் தாக்கம் சமூகத்தில் பல நல்ல வளர்ச்சித் திட்டங்களை, செய்திகளை, விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது என்றாலும் அதே ஊடகம், கலாச்சார சீரழிவுகளையும், தேவையற்ற மதிப்பீடுகளையும், வன்முறைகளையும் விதைக்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

ஊடகங்களின் ஆதிக்கம் பல நேரங்களில் இன்றைய பிஞ்சு மனங்களில் நஞ்சையும், இளையோர் மனதில் இனம் புரியத செயலையும், குடும்பங்களில் குழப்பங்களையும், உறவுகளில் உதாசீனத்தையும் இலவசமாக தூண்டிவிடுகிறது. உலகத்தையே உள்ளங்கையில் கொணர்ந்துள்ள ஊடகங்கள் மனித சமூகத்தின் அமைதியை சீர்குலைத்துவிட்டு, மன அழுத்தங்களை அதிகரித்து வருகிறன. காலம் பொன் போன்றது என்ற பொன்மொழிகளை மறந்து மணிக்கணக்கில் ஊடகங்களின் முன் அமர்ந்து நேரத்தை வீணடித்து மனித ஆற்றலை விரயமாக்குகிறார்கள் இன்றைய நவநாகரீக மனிதர்கள்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சமூக ஊடகத்திற்கான திருசபையின் அதிகார பூர்வமான ஏடான INTER MIRIFICA எண்: 13-ல் "திருச்சபையின் அங்கத்தினர் ஊடகத்தின் வழியாக மறைபரப்புப் பணியில் பல்வேறு பரிணாமங்களை எடுத்துச் செல்லும் முயற்சிகளைத் தாமதமின்றி உடனே செயல்படுத்த வேண்டும்" என்று வலியுறுத்துகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவுற்று அரை நூற்றாண்டை கடந்த இத்தருணத்திலும் மறைபரப்புப் பணியை ஊடகத்தின் வழியாக அறிவிக்க வேண்டும் என்ற அறைகூவல் தமிழகத்தில் ஆமைவேகத்தில் நகர்கிறது என்பது வருந்த தக்கது. ஆங்காங்கே அங்கொன்றும் இங்கொன்றுமாக உதித்த பிறச் சபை சகோதரர்கள் மிகமிக வேகமாக ஊடகங்களின் வழியாக நற்செய்தி பணியினை மூலை முடுக்கெல்லாம் முடுக்கிவிட்டுள்ளனர். ஏன் தனிமனிதர்கள் கூட தனித் தொலைக்கட்சி அமைத்து மக்கள் மத்தியில் விசுவாசத்தை கட்டியெழுப்புகின்றனர். இவையெல்லாம் வேரோட்மான அடித்தளத்தைக் கொண்டுள்ள நம் கத்தோலிக்க திருச்சபைக்கு விடுக்கப்பட்டுள்ள மாபெரும் சவால்.

எனவே தமிழக ஆயர் பேரவையும் தமிழகம் புதுவை துறவறசபைகளின் அமைப்பும், தமிழகம் புதுவை மேய்ப்புபணி ஆணையமும் கலந்துயைாடி தமிழக கத்தோலிக்கத் தொலைக்காட்சியை துவக்க வேண்டும் என்று ஒரு மனதாக முடிவெடுத்தது. இத்தொலைக்காட்சியைத் திருச்சபையின் தாயாகிய அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கும் விதமாக "மாதா தொலைக்காட்சி" (MATHA TV) என்று அழைக்கலாமென ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில், மத்திய அரசின் தகவல் தொடர்பு ஆணையத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு நாம் மாதா தொலைக்காட்சி நிறவனத்தின் பெயரில் ஐந்து கோடி ரூபாய்க்கு பண இருப்பு காட்ட வேண்டும். ஆகவே நம்முடைய மறைமாவட்டத்தின் சார்பாக பத்து இலட்சம் ரூபாய் நன்கொடையாக அளிக்க வேண்டிய கடிதம் நமக்கு வந்துள்ளது. இவ்வாறான நல்ல காரியங்களுக்கு ஒத்துழைக்க வேண்டியது நம் ஒவ்வொருவரது கடமை. இதற்கு அனைவரும் உதவ முன்வர வேண்டும். அனைத்து பங்குகளும் இதனை தீவிரப்படுத்தி செய்ய வேண்டும். நன்கொடையாளர் ஒருவர் நன்கொடையாக ரூ. 1000/- செலுத்தி இத்திட்டத்திற்கு உதவ வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டதின் அடிப்படையில் மாதா தொலைக்காட்சிக்கு பணம் திரட்டுவதற்காக 3 அருள்தந்தையர்களின் ஒரு குழு அமைக்கப்பட்டு, மறைவட்ட பங்கு தந்தையர், அனைத்து பங்கின் பிரதிநிதிகள் ஆகியோரின் கூட்டமும் கூட்டப்பட்டு இவைகள் விவாதிக்கப்பட்டன. இக்குழுவானது அருள்தந்தையர்கள் மற்றும் பங்கின் பிரதிநிதிகளை மறைவட்டம் வாரியாக சந்தித்து அவர்களுக்கு இதனைப்பற்றிய தெளிவான விவரத்தை தெரியப்படுதுவார்கள். பின்னர் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அருள்தந்தையரும் பிரதிநிதிகளும் இக்காரியத்தை பங்கு பேரவையில்

உள்ளவர்களுக்கு தெரியப்படுத்தி அதற்கான நன்கொடைகளை வசூலிக்க வேண்டுமென உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாதா தொலைக்காட்சி வழியாக இறைமகன் இயேசுவின் உன்னதமான மதிப்பீடுகள், மனித நேயச்சிந்தனைகள், திருக்குடும்ப நெறிகள், சிறுவர்களுக்கான சிந்தனை சிதறல்கள், இளையோருக்கான வாழ்வியல் கோட்பாடுகள், திருவழிபாட்டு சடங்குகள், நமது பாரம்பரியமிக்க பக்தி முயற்சிகள் மற்றும் கத்தோலிக்க விசுவாச விழுமியங்கள் என அனைத்தும் உங்கள் இல்லம் வந்தடைய இம்மாபெரும் முயற்சியை வெற்றி பெறச் செய்யுமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தக்கலை **மார். ஜார்ஜ் இராஜேந்திரன்**

16.01.2013 (தக்கலை மறைமாவட்ட ஆயர்)

---

குறிப்பு: இச்சுற்றுமடலை 2013 ஜனவரி 20 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலியினிடையே வாசிக்கவும்.